| O.S.No. 32/2025 | PW1: திருமதி. மின்னலா<br>க/பெ. திரு. செல்வராஜ் | 24-11-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் 8–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் கணவர் படிக்கவில்லை. என்னை வளையாபுத்தூரில் திருமணம் செய்து கொடுத்தனர். தாவா சொத்துக்கள் மேல்சீசமங்கலம், சித்தாம்பாக்கம் ஆகிய கிராமங்களில் உள்ளது. சித்தாம்பாக்கத்தில் உள்ள சொத்து நஞ்சை நிலம் ஆகும். அதன் சர்வே எண். 21 என்று நினைக்கின்றேன். திருமணமான நாள் முதல் நான் எனது கணவருடன்தான் வசித்து வருகிறேன் என்று சொன்னால், 10 நாட்கள் என் கணவருடன் இருப்பேன், மீதமுள்ள 20 நாட்கள் என் அம்மா வீட்டில் இருப்பேன்.

2. என் கணவருக்கு கூலி வேலைதான். என் கணவருக்கு அவரது அப்பா சொத்திலிருந்து வரும் வருமானத்தை சேமிப்பார், எனக்கு தனிப்பட்ட வருமானம் ஏதும் இல்லை. எனது கணவர் கூலிக்கு போனால் சம்பாதித்து என்னிடம் கொடுப்பார். எனது ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டையில் மின்னலா என்று எனது பெயர் உள்ளது, பள்ளி சான்றிதழில் வள்ளி என்று உள்ளது. எனது தந்தையின் வாரிசு சான்றிதழில் எனது பெயர் வள்ளி என்று உள்ளது. நான் மின்னலா என்றுதான் கையெழுத்து போடுவேன், வள்ளி என்று போடமாட்டேன்.

3. எனது தந்தை பெயர் ஆனந்தன். ஆனந்தனின் தந்தை பெயர் இராமன். என் தாத்தா இராமனுக்கு 2 மனைவிகள். முதல் மனைவிக்கு சக்கரவர்த்தி, கோவிந்தம்மாள் ஆகியோர் வாரிசுகள் ஆகும். 2–வது மனைவி பெயர் வர்த்தம்மாள், அவர் எனது பாட்டி ஆவார். சக்கரவர்த்தி சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார். சக்கரவர்த்திக்கு 2 பெண்கள், 2 ஆண்கள் வாரிசுகள், அவர்கள் உயிருடன் உள்ளார்கள்.

கோவிந்ததம்மாளுக்கு துரை, பூவாத்தாள் ஆகிய 2 வாரிசுகள் ஆவார்கள், அதில் துரை இறந்துவிட்டார். துரைக்கு 2 மகன்கள் வாரிசுகள் உள்ளார்கள். வர்த்தம்மாளுக்கு முத்தம்மாள் மற்றும் ஆனந்தன் ஆகிய இருவர் வாரிசுகள் ஆகும். முத்தம்மாள் இறந்த பிறகு அவரது வாரிசுகள் ஏழுமலை, அம்பிகா ஆகியோர் உயிருடன் உள்ளார்கள். எனது தாயார் சின்னபாப்பாவும் தற்போது உயிருடன் உள்ளார். தாவா சொத்துக்கள் என் தந்தை சம்பாதித்த சொத்துக்கள் என்றுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தந்தையின் சொத்துக்கள் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

4. தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் என்னுடைய பாட்டனார் இராமனுக்கு பாத்தியமான பூர்வீக சொத்துக்கள் என்று எனது பிரமாண வாக்குமூலத்திலும், வழக்குரையிலும் சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்கள் குறித்து எது உண்மை என்றால் என் தந்தை சம்பாதித்த சொத்து என்பதுதான் உண்மை.

5. எனது தாத்தாவிற்கு சொந்தமான சொத்தானது முருகானந்தம் கிராமத்தில் வீடு மட்டும் நிலங்கள் உள்ளது. அந்த சொத்துக்களை என் தாத்தா உயிருடன் இருந்தபோது பாகப்பிரிவினை செய்து வைத்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சொத்தினை எனது சித்தி மகன் அனுபவித்து வருகிறார், அந்த சொத்து எனது அப்பாவின் பாகத்திற்கு வந்த சொத்தாகும். அந்த சொத்தை பொறுத்து பாகம் கேட்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து வேறொரு தாலுக்காவில் உள்ளதால் இவ்வழக்கில் சேர்க்கவில்லை. என் தாத்தா சம்பாதித்த சொத்து என் அப்பாவிற்கு பாகப்பிரிவினைப்படி வந்தது என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது.

6. எனது அப்பா ஆனந்தன் 1963 முதல் 1973 காலகட்டத்தில் மிலிட்டரியில் பணி செய்தார். பிரதிவாதி அரசு போக்குவரத்து கழகத்தில் பணியில் இருந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். என் தந்தை 2009-ல் இறந்துவிட்டார். அதற்கு முன்பு எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் என் தாத்தா இறந்துவிட்டார் என்றால் நான் சிறிய வயது இருக்கும்போது இறந்துவிட்டார். என் தந்தை இறந்த ஆண்டிலிருந்து பாகம் கேட்டேன், ஆனால் கொடுக்கவில்லை. என் தந்தை இறந்ததிலிருந்து ஒரு நெல்மணி கூட எனக்கு கொடுக்கவில்லை, பிரதிவாதி மட்டும்தான் அனுபவித்து வருகிறார். பட்டா பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் இல்லை, என் அப்பா பெயரில் உள்ளது. எனது தந்தையின் வாரிசு சான்றிதழை வாங்கிவிட்டீர்களா என்றால் வாங்கவில்லை.

7. என் தந்தை இறந்தபிறகு எப்போது பிரதிவாதி பெயரில் பட்டா மாறியது என்று இன்றைய தேதி வரை எனக்கு தெரியவில்லை. இன்றைய தேதி வரை பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்று வருவாய்த்துறை அலுவலரை சந்தித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. 5-வது அயிட்ட சொத்தை பொறுத்து மற்ற சொத்துக்களுக்கு என் தந்தை பெயரில் பத்திரம் உள்ளதா என்றால் இல்லை. சித்தாள்பாக்கம் கிராமத்தில் சொத்து உள்ளது என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தெரியவில்லை. எனது தந்தை 2020-ல் இறப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னர் வரை எனக்கு எந்த வருமானமும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் எனது கைத்தொழில் மூலம் வந்த வருமானத்தைக் கொண்டு 1984-ல் என் கணவருக்கு சொந்தமான இடத்திற்கு பக்கத்தில் 1 ஏக்கர் சொத்து வாங்கினேன்.

8. மேற்படி சொத்து என் தந்தை அவரது சொந்த பணத்தைக் கொண்டு எனக்கு வாங்கி கொடுத்த சொத்து என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்து எனது பெயரில் கிரய பத்திரம் எழுதப்பட்டதே தவித அது என் தந்தையின் சொத்துதான் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தினை எனக்கு கிரயம் வாங்கிக் கொடுத்துவிட்டு மற்ற சொத்துக்களை பிரதிவாதி அடையவேண்டும் என்று எனது தந்தை வாய்மொழியாக சொன்னார் என்றாலும், அதனை நான் ஒப்புக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. அதனால்தான், கடந்த 16 ஆண்டுகளாகவும் நான் பாகம் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 16 ஆண்டுகளாக தாவா ஊருக்கு சென்று என் அம்மாவை பார்த்து வருவேன். எனக்கும் என் தாயாருக்கும் விரோதம் இல்லை.

9. எனக்கு 2 பெண், 2 ஆண் வாரிசுகள் ஆகும். பிரதிவாதிக்கு 5 பெண் வாரிசுகள் ஆகும். பிரதிவாதியின் 5 மகள்களில் 2 மகள்களுக்கு, என் 2 மகன்களுடன் திருமணம் செய்து கொள்வதற்கான வயது பொருத்தம் இருந்தது என்றால் சரிதான். எனது 2 ஆண் மகன்களுக்கும், பிரதிவாதியின் 2 மகள்களை திருமணத்திற்கு கேட்டேன். அதற்கு பிரதிவாதி கொடுப்பதுபோல் பேசவில்லை. எனது 2 மகன்களுக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டேன். திருமணம் செய்துகொடுக்காததால் பிரதிவாதி மீது வருத்தம் உள்ளது என்றால் இல்லை. பிரதிவாதி அவரது மகள்களை எனது மகன்களுக்கு திருமணம் செய்து கொடுக்காத காரணத்தினால்தான், அதனை மனதில் வைத்துக்கொண்டு 20 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

10. தாவா சொத்தில் 16 ஆண்டுகளுக்கு முன்னரே எனக்கு அதில் உரிமை இல்லை என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை இறந்து சட்டத்திற்கு உட்பட்ட காலத்தில் நான் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனது வழக்கு காலவரம்பு கடந்த வழக்கு என்றாலும் சரியல்ல. எனது தாயார் மற்றும் மற்ற வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால், என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளைக் கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.24 15:01:22 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**